Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 30 புதன்கிழமை (14-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 179

# கிளிநொச்சியை விடுவிக்கும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்!

## அமைச்சர் ரத்வத்த அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 14

"கிளிநொச்சிப் பகுதியை விடுவிக்கும் வரை 'உண்மை வெற்றி' இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்;"

—இவ்வாறு அறிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பாதுகாப்புத் துறைப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை,

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டது என்று வெளிநாட்டுச் செய்திநிறுவனம் ஒன்று வெளியிட்ட செய்தி குறித்து கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் இத்தகைய செய்திகளை வெளியிடுவது குறித்து தம்மால் எதுவும் செய்ய முடியாது என்றும் —

கிடைக்கக்கூடிய சகல இராணுவ உபாயங்களையும் பயன்படுத்தி தற்போதைய யுத்தம் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் —

அவர் மேலும் கூறினார்.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் பொறுப்பற்ற அறிக்கைகள் குறித்து அரசாங்கம் கவலை கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-3)

# கிளிநொச்சியில் மயான அமைதி!

## அடுத்த நடவடிக்கையை படை திட்டமிடுகின்றதாம்

கொழும்பு, ஓக. 14

கடந்த இரு வாரங்களுக்கு மேலாக கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்கள், ஷெல் வீச்சுக்கள், மோட்டார் குண்டுத் தாக்குதல் மற்றும் விமானக் குண்டு வீச்சுகள் ஓய்ந்து விட்டதாகவும்—

இப்போது அந்தப் பகுதியில் மயான அமைதி நிலவுவதாகவும்—

அங்கிருந்து கிடைக்கும் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகைகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

பிரதான இலக்கை படையினர் அடைந்து விட்டதன் பின்னர் கிளிநொச்சி நகர் மீதான ஷெல் தாக்குதல்களை அவர்கள் நிறுத்தி விட்டனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவிந்தார்.

இராணுவத்தினர் அடைந்த பிரதான இலக்கு எது என்பதை அவர் தெளிவாக விவரிக்க வில்லை.

''ஷெல் தாக்குதல்களை நடத்த வேண்டும் என்பதற்காக ஷெல் தாக்குல்களை நடத்துவதில்லை, அதில் எமக்கு நம்பிக்கையும் இல்லை. எமது இலக்கின் பிரதான பகுதியை நாம் அடைந்து விட்டோம். அடுத்த நடவடிக்கை குறித்து திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம்'' — என்றும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (உ-3)

## தொடர்ந்து தன் நிலைகளை படை பலப்படுத்துகின்றது!

கொழும்பு, ஓக. 14

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரச துருப்புகள் தாம் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் தமது நிலைகளைத் தொடர்ந்து பலப்படுத்தி வருகின்றன என அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆங்காங்கே இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் இருவரும் மூன்று படையினரும் உயிரிழந்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்றும் —

விடுதலைப் புலிகளும் இராணுவத்தை எதிர்த்துக் கடுமையாகப் போராடி வருகிறார்கள் என்றும் —

இலங்கை வானொலி மேலும் தெரிவித்தது. (உ-3)

# ரணில் விரைவில் கைது?

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் சொந்தத் தொகுதியான பியகமவில் உள்ள பட்டலந்தப் பகுதியில் கடந்த ஆட்சிக் காலத்தில் இயங்கியதாகக் கூறப்படும் சித்திரவதை முகாம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவார் என்ற செய்தி கொழும்பில் பரவலாக அடிபடத் தொடங்கியுள்ளது.

அவ்வாறான செய்தியைத் தாமும் கேள்விப்பட்டுள்ளதாகவும் —

ரணில் கைது செய்யப்படின் அது ஓர் அரசியல் பழிவாங்கலாகவே அமையும்எனவும்—

ஐ, தே. க. செயலாளர் காமினி அத்துக்கோறளை தெரிவித்தார்.

ரணில் கைதாகலாம் என்ற செய்தியை பொலீஸ் மா அதிபர் ராஜகுரு மறுத்துள்ளதாக செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையை அடுத்து ஏ. எஸ். பி. ஒருவர் உட்பட ஏழு பொலீஸ் அதிகாரிகளைக் கைது செய்து தடுத்து வைப்பதற்கான தடுப்புக் காவல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

மேலும் 11 பொலீஸ் அதிகாரிகள் விரைவில் கைது செய்யப்படவிருப்பதை கொழும்புச் செய்திகள் ஊர்ஜிதம் செய்தன. (உ-10)

## செய்திச் சாரம்

### சிப்பாய் பலி!

கொழும்பு, ஓக. 14

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிப்பாய் ஒருவர் உயிரிழந்தாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-3)

### திருமலையில் தாக்குதல்

கொழும்பு, ஓக. 14

திருகோணமலை மாவட்டம் கோமரசன் கடவலவுக்கு வடமேற்கே சுமார் பத்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஹமு வெஸ் வெவ பகுதியில் ரோந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்;மேலும் இருவர் காயமுற்றனர்.

புலிகளின் தாக்குதலுக்கு படையினர் பலத்த பதிலடி கொடுத்தனர்என்று கொழும்பில் அறிவிக்கப்பட்டது. (இ-3-10)

### பொலீஸ் அருகிலேயே வெடித்தது

மாமாங்கப் பிள்ளையார் கோவில் சுற்றாடலில் கடந்த ஞாயிறன்று 33 பக்தர்கள் மற்றும் நான்கு பொலீஸார் காயமடையக் காரணமான வெடிகுண்டு கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள பொலீஸ் நிலையத்துக்கு நெருக்கமாக — கோவிலின் வெளி வீதியில் உள்ள முட்டாசுக் கடைகளுக்கு அருகேயே வெடித்துள்ளது.

இதற்கிடையில் —

இக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் புலிகள் மீது அரசும், அரசு மீது புலிகளும் குற்றம் சுமத்தியுள்ளனர். (உ-3)

### செஞ்சிலுவை அலுவலகம் தாக்கப்பட்டது

கொழும்பு,ஓக. 14

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது. என்று அப்பகுதிக்குச் சென்று திரும்பிய செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளைச் செயலாளர் சிவநாதன் கூறுகிறார். (உ-3)

### சிட்னியில் ஆர்ப்பாட்டம்

மணிலா, ஓக. 14

இலங்கையில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்து ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வாழும் தமிழர்கள் கடந்த ஞாயிறன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

### ஜீப் கடத்தல்

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் சுகாதாரத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்று நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டது. (உ-3-10)

### பொருள்களுடன் 29 லொறிகள் வன்னி வருகை

வவுனியா சாந்தசோலையில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு நேற்று 21 லொறிகளில் மாவும், 5 லொறிகளில் அரிசியும், இரு லொறிகளில் சீனியும், ஒரு லொறியில் சில்லறைப் பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

மேலும் பொருள்களை எடுத்துச் செல்வதற்காக இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து ஐம்பது லொறிகள் இன்று சாந்தசோலைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது (உ-3)

### அமெரிக்கா புலிகளைத் தடை செய்யாது

புலிகள் அமைப்பை அமெரிக்காவில் தடை செய்வதற்கான நியாயமான காரணங்கள் எவையும் இல்லை என்று ஸ்ரீலங்காவுக்கான அமெரிக்கத் தூதர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்துவதற்கு மத்தியஸ்தம் வகிக்குமாறு அமெரிக்காவை புலிகள் கேட்டதாகவும் —

ஸ்ரீலங்காவுக்கான யுத்த ஆயுத விற்பனையை அமெரிக்கா அதிகரிப்பதாகவும் —

வெளியான செய்திகளில் உண்மை இல்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### வன்னியில் செஞ்சிலுவை நடமாடும் பிரிவு

வன்னிப் பகுதியில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நடமாடும் ஏழு பிரிவுகள் அங்கு அனுப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## கோப்பாய் பயிற்சிக் கலாசாலையில்

யாழ்ப்பாணம் ஓக. 14

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புதிய அதிபராகப் பதவியேற்றுள்ள கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளையை வரவேற்கும் விழாவும், கலாசாலையின் உப அதிபராக நீண்ட காலம் பணிபுரிந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. க. குககுமாரராசாவின் சேவை நலன் பாராட்டு விழாவும் இன்று கலாசாலையில் நடைபெறவிருக்கின்றன.

கலாசாலை சமூகத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-3)

# 'தாள்கோதிப் புழு' தாக்கம்: வெங்காய செய்கை பாதிப்பு

### கிருமிநாசனி இன்றி விவசாயிகள் அவதி

வலிகாமம் பகுதியில் வெங்காயப்பயிர்களை "தாள் கோதிப் புழு" தாக்கி வருகின்றது — பொருத்தமான கிருமி நாசனி இல்லாமையால் தாள் கோதிப் புழுவைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலைப்படுகின்றனர்.

மிகத்திவிரமாக பெருகக் கூடிய தாள் கோதிப் புழு வெங்காயத்தின் தாள்களைக் கோதி உட்புகுந்து வெங்காயப் பயிர்களை சேதம் செய்யக் கூடியது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு மிகவும் செறிவுத் தன்மை கொண்ட கிருமி நாசனைகளை காலை மாலை — வெயில் இல்லாத நேரங்களில் தெளிக்கவேண்டும். குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருத்தமான கிருமி நாசனியை விசிறத் தவறினால் வெங்காயப்பயிர் மஞ்சள் நிற மடைந்து விளைச்சல் தர முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்றும் கூறப்படுகின்றது.

எந்தக் கிருமி நாசனியையும் இலகுவாகாப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இங்கு நிலவுவதால் வெங்காயப் பயிர்ச் செய்கை பெருமளவில் பாதிப்படையும் என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (உ-11)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் டானியல் கந்தவனம்

கற்கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மேரி சேதுப்பிள்ளையின் அன்புக் கணவருமான ஆறுமுகம் டானியல் கந்தவனம் 10 - 08 - 96 அன்று கர்த்தருக்குள் நித்திரையானார். இவரது நல்லடக்க ஆராதனை மட்டுவிலில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றும் கொள்ளவும்.

தகவல்:
க. அரியதாஸ் (மகன்)
(ஆசிரியர், யா/ கைதடி
விக்னேஸ்வரா வித்தியாலயம்)

"இராணி பவனம்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(42242)

### கந்தப்பிள்ளை செல்வநாயகம்

மாவிட்டபுரம் மடத்தடி, தெல்லிப்பளையைச் சேர்ந்த கந்தப்பிள்ளை தம்பதிகளின் புதல்வன் செல்வநாயகம் அவர்கள் 13 - 08 - 1996 நேற்று செவ்வாய்க் கிழமை காலமானார்.

இவர், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், சந்தானலட்சுமி, முத்துக்குமாரு, திலகவதி, பத்மாவதி, செந்திக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிதம்பரநாதன், கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழினி, சஜீவன், தர்சினி, யசோகுலன், சாரங்கன் ஆகியோரின் பேரனும், .காலஞ்சென்றவர்களான கனகசபை, வைத்திலிங்கம், சிவக்கொழுந்து ஆகியோரினதும், வீரசிங்கம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும்; நீர்வேலி தர்மலிங்கம் பரராசசிங்கம் அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார், நித்தியானந்தன், வரதராசன், சேனாதிராசா, தெய்வேந்திரராசா ஆகியோர் அன்னாரின் பெறாமக்களும் ஆவர்.

இறுதிக்கிரியைகள் 14 - 08 - 96 இன்று புதன் கிழமை நண்பகல் 12 - 00 மணியளவில் த. பரராஜசிங்கமவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. வீரசிங்கம் (சகோதரன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(42240)

### திருமதி தம்பிஐயா மகேஸ்வரி

நல்லூரில் வசித்த வ தம்பிஐயாவின் மனைவி மகேஸ்வரி 27-07-96 இல் வவுனியாவில் இறைபதம் எய்திவிட்டார். இவர் க.ராஜேஸ்வரி, த.நல்லைநாதன், த.தில்லைநாதன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செ. கந்தசாமி, ந. பரிமளகாந்தி, தி. நாகராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், கெங்காலட்சுமி, சுகிர்தாலட்சுமி, (நோர்வே) கிருபாலட்சுமி, (லட்சுமி அச்சகம் யாழ்) விஜயலட்சுமி (தாஸ் ஹாட் வெயர் ஸ்ரோர்ஸ், வவுனியா) கெங்காதரன் (கனடா), தயாலட்சுமி, ஸ்ரீதரன் (சுவிஸ்), நித்தியலட்சுமி, ஜெயலட்சுமி, சுகபாணி, றஞ்சி, கோகிலா, மோகன், காயத்திரி, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-07-96 அன்று வவுனியாவில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ச. சிங்கரட்ணம்
(பேரன்)

இல, 23/7 முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு
யாழ்ப்பாணம்.

(42233)

# ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர் சுடப்பட்டதற்கு சிப்பாய் காரணம்?

### 2 துப்பாக்கிகளை ரகசியப் பொலீஸ் கைப்பற்றியது

கொழும்பு, ஓக. 14

கடந்த வாரம் அனுராதபுரம் ஸ்ரீமாகபோதிக்கு ஜனாதிபதி விஜயம் செய்யவிருந்த வேளை, ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் இரகசியப் பொலீஸார் இராணுவச் சிப்பாய்களுக்குச் சொந்தமானவை எனக் கருதப்படும் இரண்டு துப்பாக்கிகளை மேல்விசாரணைகளை மேற்கொள்வதற்காக எடுத்துச் சென்றுள்ளனர் என "திவயின" சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக இது வரை எவரும் கைது செய்யப்படாதது தெரிந்ததே. (இ-10)

## தண்ணீர்: குடம் 50 சதம்

யாழ்ப்பாணம், ஓக. 14

நெடுந்தீவில் குழாய் நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடி தண்ணீர் ஒரு குடத்துக்கு 50 சதவீதம் பிரதேச சபையால் கட்டணமாக அறவிடப்படுகின்றது. (இ-111)

## சமய நிதிகளில்

குருநகர், ஓக. 14

யாழ் புனித மரியன்னை பேராலய திருவிழாவில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு நற்கருணை வழிபாடு இடம் பெறும்.

நாளை வியாழக்கிழமை திருநாள் திருப்பலிகள் நடைபெறும். அன்றைய தினம் முதல் திருப்பலி காலை 5.45ற்கும் இரண்டாம் திருப்பலி காலை 7.00 மணிக்கும் நடைபெறும். மாலை 4.30 மணிக்கு நடைபெறும் வழிபாட்டை தொடர்ந்து புனித மரியாளின் திருச்சொரூபம் ஆலய வளவினுள் பவனியாக கொண்டு செல்லப்படும்.

இந்த ஆலய வழிபாடு மிகவும் எளிமையான முறையில் நடைபெற உள்ளதாக யாழ். மரியன்னை பேராலய பங்குத் தந்தை பி இருதயதாஸ் அடிகளார் தெரிவித்தார். (இ-51)

## தென்மராட்சியில் கசிப்பு உற்பத்தி

சாவகச்சேரி ஓக. 14

தென்மராட்சியின் பல பகுதிகளில் தற்போது உயிர்க் கொல்லியான கசிப்பு தாராளமாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது.

கசிப்பு உற்பத்தியை நுணாவில், மட்டுவில், கச்சாய், கெருடாவில், வரணி போன்ற கிராமங்களில் குடிசைக் கைத்தொழிலாக சிலர் மேற்கொள்ளுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-31)

## கணித-விஞ்ஞான வினா விடைப் போட்டி

வலிகாமம் தெற்கு, ஓக 14

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளில் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கிடையில் கணித-விஞ்ஞான வினா விடைப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

பாடசாலை, கோட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் போட்டிகள் நடைபெறும்.

பாடசாலை மட்டப்போட்டிகளை எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்பு நடத்தி ஐந்து போட்டியாளர்களின் பெயர்களை 25 ஆம் திகதிக்கு முன் கோட்ட அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாணம் கல்வி வலயம் 2 இன் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் அறிவித்துள்ளார்.

கோட்ட, வலய மட்டத்திலான போட்டிகள் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெற உள்ளன. (இ-152)

## ஒரு லட்சம் பக்தர்கள் நீராடல்

சென்னை, ஓக. 14

ஆடி அமாவாசையை முன்னிட்டு இராமேஸ்வரம் கடலில் நேற்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் புனித நீராடினார்கள்.

அங்குள்ள அருள்மிகு இராமநாதர் திருக்கோயிலில் ஆடி அமாவாசையை ஒட்டி சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. (உ)


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

ஆங்கிலமொழி
கற்பித்தலில்
பட்டப்பின்
தகைமைச்
சான்றிதழ்
(மீள் பரீட்சை)

ஆங்கிலமொழி
கற்பித்தலில்
தகைமைச்
சான்றிதழ்
(மீள் பரீட்சை)
1995

மேற்படி பரீட்சை 1996/08/27 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. நேர அட்டவணை தேர்வுகளும் அனுமதிகளும் கிளை விளம்பரப்பலகையில் பார்வையிடலாம். மேலதிக விவரங்களுக்கு தேர்வுகளும் அனுமதிகளும் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

[சி/2756]



வணிகப் புள்ளிவிபரவியல் (A|L)
மாதிரி வினா (தொகுப்பு 1)

விற்பனையாகின்றது.

1. BOND INSTITUTE, யாழ்.
2. மதி புத்தகசாலை, K K. S. வீதி, கொக்குவில்
3. ராஜ் கடை, 262, ஆனைப்பந்தி சந்தி

அடுத்த பதிப்பு விரைவில்,

ஆக்கம்: க. இராஜேந்திரகுமார் (B. Sc.)

வணிகப்புள்ளி விபரவியல்
பொருளியல் 97|98 (A|L)
பிரத்தியேக வகுப்புகள்

ஆரம்பிக்கப்படவுள்ளன.

திரு. க. இராஜேந்திரகுமார் (B. Sc.)
திரு. செ. சிறி (B. A.)

குறிப்பு:
அலகு 1 தொடக்கம் 4 வரையான வினாக்கள் பாடத்துடன் மீட்கப்பட்டு அலகு 5 ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்பு: "சேர்ச் அருகாமை",
K. K. S. Road, கொக்குவில் கிழக்கு.

(42237)

# யுத்த நிறுத்த முயற்சிக்கு மத்தியில் செச்சின்யாவில் மோதல் நீடிப்பு!

## பிரச்சினையை தீர்க்க ரஷ்ய பாதுகாப்பு சபைத்தலைவருக்கு முழு அதிகாரம்

குரொஸ்னி, ஒக. 14

தனிநாடு கோரிப் போராடி வரும் ரஷ்யப் பிராந்தியமான செச்சின்யாவின் தலைநகரான குரொஸ்னியில் யுத்த நிறுத்தத்துக்கான அறிகுறிகள் தென்படுகின்ற அதேவேளை பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்களுக்கும் ரஷ்யப்படைகளுக்கும் இடையில் குரொஸ்னிக்கு வெளியே கடும் சண்டை நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

செச்சின்யப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதாக ரஷ்யா உத்தரவாதம் அளித்துள்ள போதிலும் ரஷ்யப்படைகள் மீது கிளர்ச்சியாளர்கள் பெரும் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாகவும்—

தலைநகர் குரொஸ்னியின் பெரும் பகுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யெல்ட்ஸினின் பதவி ஏற்பு வைபவத்துடன் ஒரு வார காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதலில் 700க்கு மேற்பட்ட ரஷ்யப்படையினரைக் கொன்றுவிட்டதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே சமயம் ஜனாதிபதி யெல்ட்ஸினால் குரொஸ்னிக்கு அனுப்பப்பட்ட ரஷ்ய பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்சாந்தர் லெபக் செச்சின்ய கிளர்ச்சித் தலைவர்களுடன் குரொஸ்னியில் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு மீண்டும் மொஸ்கோ சென்றுள்ளார்.

## தேர்தலில் போட்டியிட்டால் மரண தண்டனை!

### காஷ்மீர் தீவிரவாதக் குழு எச்சரிக்கை

ஸ்ரீநகர், ஒக. 14

காஷ்மீர் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு காஷ்மீரில் உள்ள தீவிரவாத அமைப்பான ''ஹர்க்கத்துல் முன்னீல்'' எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கப் போவதாக அது பயமுறுத்தி உள்ளது.

ஆயிரக்கணக்கான தியாகிகளின் கல்லறைகளுக்கு மேல் அரசியல் சாம்ராஜ்யம் எழுப்ப நினைப்பவர்களை நாம் அனுமதிக்க மாட்டோம்.

அதனை மீறுபவர்கள் மரணத்தைச் சந்திக்க தயாராக இருங்கள் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் 7ஆம், 14ஆம், 26ஆம், 30ஆம் நாள்களில் காஷ்மீரில் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் நடந்து வருவது தெரிந்ததே.

அதே வேளை— நேற்று முன்தினம் அங்கு இடம்பெற்ற வன்முறைகளில் 34 போராளிகள் உட்பட 43 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (இ-3)

## பொருளாதாரம் அல்லாத விடயங்களிலேயே ஆதரவு

### மார்க்சிஸ கம்யூனிஸ்ட் தெரிவிப்பு

சமூகநீதி, மதசார்பின்மை, காஷ்மீர் தேர்தல்கள், மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் போன்ற பொருளாதார விடயங்கள் அல்லாத விடயங்களிலேயே மார்க்சிஸ கம்யூனிஸ்ட்கட்சி தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு தருவதாக அதன் ''பொலீட் பீரோ'' உறுப்பினர் திரு. சீதாராம் செச்சோரி கூறியுள்ளார்.

பொருளாதாரத் துறையில் தேசிய முன்னணி அரசுடன் கருத்து வேற்றுமைகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

வகுப்புவாதச் சக்திகளை அண்டவிடாது செய்து ஜனநாயகச் சக்திகளுக்கு உத்வேகம் அளிப்பதற்காகவே குறைந்த திட்ட பொதுத்திட்டத்தின் ஆக்கபூர்வமான அம்சங்களை தமது கட்சி ஆதரிப்பதாக அவர் கூறினார்.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தையும், வங்கித்துறையையும் தனியார் மயமாக்குவதை தமது கட்சி எதிர்க்கும் என்றும்—

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் விற்கப்படுவது, பெற்றோலியப்பொருள் விலை உயர்வு ஆகியவற்றுக்கு தமதுகட்சி எதிர்ப்பு தெரிவிக்கும் என்றும் — அவர் கூறினார். (இ-3)

## உலக அரங்கில்

மொஸ்கோவில் ஜனாதிபதி யெல்ட்ஸினை சந்தித்து தனது குரொஸ்னி விஜயத்தின் பலாபலன்கள் குறித்து அவர் விளக்கியதாக நம்பப்படுகிறது.

செச்சின்யப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முழு அதிகாரத்தையும் ஜனாதிபதி யெல்ட்ஸின் தனது பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்சாந்தர் லெபக்கிற்கு வழங்கி உள்ளார் இது தொடர்பான பிரகடனம் ஒன்றிலும் யெல்ட்ஸின் கையெழுத்திட்டார்.

செச்சின்யப் பிரச்சினைக்கு 48 மணி நேரத்தில் தீர்வு காணுமாறு அலெக்சாந்தர் லெபக்கிற்கு யெல்ட்ஸின் உத்தரவிட்டுள்ளார்.

செச்சின்யாவுக்கு பூரண சுதந்திரம் வழங்கி அதனோடு நீண்ட கால நட்புறவு ஒப்பந்தம் செய்து கொள்வதுதான் பிரச்சினையை தீர்க்க சிறந்த வழி என்று ரஷ்ய பதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்சாந்தர் லெபக் தெரிவித்துள்ளார். (இ-3)

## ஸாம்பியாவில் தேசத்துரோக வழக்கு

எநரோபி.ஒக. 14

ஸாம்பியா நாட்டின் முக்கிய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய விடுதலைக் கட்சியின் துணைத் தலைவர் ஒருவர் உட்பட அதன் எட்டு சிரேஷ்ட தலைவர்களுக்கு எதிராகத் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடத்தப்படுகிறது.

அரச கட்டடங்களை வெடி வைத்துத் தகர்க்கும் நோக்கத்துடன் ஓர் இயக்கத்தை நடத்தியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஸாம்பியா சட்டத்தின்படி இவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படும். (இ-3)

## துணைச்செயலர் முத்துச்சாமி பதவி நீக்கம்

சென்னை, ஒக. 14

முன்னாள் மாநில அமைச்சரும் அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவருமான திரு. எஸ். முத்துச்சாமி அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கட்சி விரோத நடவடிக்கைகளுக்காகவும் —

கட்சிக்கு அவப்பெயர் உண்டாக்கும் வகையில் நடந்து கொண்டதற்காகவும் — அவர் நீக்கப்படுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் தெரிவித்தார் (இ-3)

## ஜெருஸலம் நகரை தலைமையகமாக கொண்ட சுதந்திர பலஸ்தீனம்

### சர்வதேச மத்தியஸ்தத்தை அரபாத் நாடுவார்

ஜெருஸலத்தை தலைமையகமாகக் கொண்ட சுதந்திரமான பலஸ்தீனம் ஒன்று உருவாவதை ஏற்க இஸ்ரேல் மறுக்குமாயின் இது குறித்து சர்வதேச மத்தியஸ்தத்தை நாடப் போவதாக பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் கூறியிருக்கிறார்.

ஜெரூஸலத்தின் வருங்காலம், அல்லது தனிப்பட்ட பலஸ்தீன நாட்டை உருவாக்குதல் பற்றி பலஸ்தீன மக்களுடன் பேசி முடிப்பதற்கான எந்தவொரு வாய்ப்பும் இருப்பதாக இஸ்ரேல் கருதவில்லை என்று அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெத்தானியாகோ கூறியதாக ஓர் அரபு நாளேடு செய்தி வெளியிட்டிருந்தது.

இதுகுறித்துக்கருத்துத்தெரிவிக்கையிலேயே அரபாத்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கிடையில்— பலஸ்தீன சமாதான உடன்படிக்கையை நிறைவேற்ற பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார். (இ-3)

## வடக்கே அதிக பொருள்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக. 14

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மாதந்தோறும் 5 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களும் ஏனைய பொருள்களும் அனுப்பப்படுகின்றன. எனினும் அங்குள்ள மக்களுக்கு மாதாந்தம் 12 ஆயிரம் மெற்றிக்தொன் பொருள்கள் தேவைப்படுகின்றன.

வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கான புனர்வாழ்வு அதிகாரசபை மேற்கண்டவாறு தெரிவித்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்தது.

எனினும் இலங்கைக் கடற்படை, அத்தியாவசிய சேவை ஆணையாளர் பணிமனை, அரசாங்க அதிபர் பணிமனை, துறைமுக அதிகாரசபை ஆகியவற்றின் உதவியுடன் 13 ஆயிரம் மெற்றிக்தொன் பொருள்களை அனுப்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## மக்கள் ஆலோசனைக்குழு வடக்கில் ஏற்படுத்த முடிவு

கொழும்பு, ஒக. 14

வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்ற மக்கள் ஆலோசனைக் குழுக்களின் உதவி பெற்றுக்கொள்ளப்படும் என்று இலங்கை வானொலி மூலம் தெரிவிக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், கிராம மட்டத்திலும் இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும்—

இந்தக் குழுக்கள் தங்கள் பகுதிக்குள் இருந்துவரும் தேவைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை சிபார்சு செய்யும் என்றும்—

இந்தப் பகுதிகளில் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் — இலங்கை வானொலி மேலும் தெரிவித்தது. (இ-10)

## குடும்பப் பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக. 14

மேசையில் எரிந்து கொண்டிருந்த அரிக்கேன் விளக்கு தட்டுண்டு தீப்பற்றியதில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

குருநகர் மத்திய கிழக்கு வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் கொன் சன்ரைன் லூர்துநாயகி கொன்சி (வயது 23) என்பவரே படுகாயமடைந்தவராவார். (இ-15)

இராணுவத்திலிருந்து

## விலகிச் சென்றோரே குற்றங்களில் ஈடுபாடு

### வழக்கில் நீதிவான் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 14

இன்று நாட்டில் நடைபெறும் பயங்கரக் கொள்ளை, கொலை போன்ற சம்பவங்களில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே ஈடுபடுகின்றனர். இது போன்ற கொலைச் சம்பவங்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கொட்டாவ நீதிவான் திரு. சி. ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

யக்கலமுல்ல கிராமத்தை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தகப்பன், மகன், ஆகியோரைக் கோரமாகக் கொலைசெய்த வழக்கு விசாரணையின் போதே நிதிபதி இதனைத் தெரிவித்தார்.

''இன்று இராணுவத்தில் 4 ஆம் 5 ஆம் வகுப்புப் படித்தவர்கள் கூட சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒருமாத கால துப்பாக்கிப் பயிற்சி மட்டுமே வழங்கப்படுகிறது. இத்தகைய இராணுவத்தினர் சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளனர்'' என்றும் நிதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-3)

## தெல்லிப்பளை ப. நோ. கூ. ச ஒய்வூதியம்

ஜூலை மாத ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியக்காரர்கள் சுன்னாகம் சோதனைச்சாவடியூடாகமல்லாகம்இளையதம்பி கட்டடத்தில் உள்ள தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் இதற்கான காலப்பகுதி இன்று 14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரையாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ஒலிப் பதிவாளர்

5 வருட முன் அனுபவமுள்ள ஒலிப்பதிவாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும். சிபார்சுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பங்களை: மே/பா, இல:- 512, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவும்.
[சி-2742]

### விண்ணப்பப் படிவம்

தபால் சேவையின் இரண்டாம்தர பதவிகளுக்கான படிவவிவரம் விற்பனையாகிறது. தபாலில் பெற விரும்புவோர் ரூபா 5/- பெறுமதியான முத்திரையும், சுய விலாசம் இட்ட நீண்ட தபால் உறையும் அனுப்பவும். நாயக பாலன், புத்தகக் களஞ்சியம், மானிப்பாய். (42223)

### கணிதம், ஆங்கிலம்

O / L Distinction, Credit பெறுபேறடைய, தவணைப் பரீட்சைகளில் ஆண்டு 6, 7, 8 9, 10 மாணவர்கள் உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.
[42207]

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், மாதவிடாய்குத்து, வலிப்பு, சரும நோய்கள், மூல மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [42111]

### விநியோகிக்கப் படுகிறது

Dr. அல்போன்சஸ் அத்தனாசியார் (சில்லாலை) இல. 372, பிரதான வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (பழைய இடத்தில்) மீண்டும் இயங்குகின்றது. சகல விதமான மருத்தெண்ணெய் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம். மருத்தெண்ணெய் விநியோகம் மட்டும் நடைபெறும்.
(42165)

### சேவை

தட்டெழுத்து வேலைகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு இல: B 418, மண்டுவில் அம்மன் வீதி, ஐயா கடையடி, மீசாலை. (42153)

### மீண்டும் ஆரம்பம்

குழந்தைகள், முதியவர்கள் அனைவருக்கும் சிறந்த சிகிச்சையளிக்கின்ற இல. 129, ஸ்ரேஷன் றோட் இரெட்ணம் வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் தனது பழைய இடத்திலேயே சேவையைத் தொடர்கிறது என்பதை அறியத் தருகிறோம்.
(42236)

## மோட்டார் சைக்கிள் வாங்க கடன்

கொழும்பு, ஓக. 14

மோட்டார் சைக்கிள் மற்றும்சைக்கிள்கொள்வனவுசெய்வதற்கு அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆர். எம். ஜெயமான அறிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கான கடன் ரூபா 22 ஆயிரத்து 500 இல் இருந்து ரூபா 50 ஆயிரம் ஆகவும் — சைக்கிள் வாங்குவதற்கான கடன் ரூபா 2 ஆயிரத்திலிருந்து ரூபா 3 ஆயிரம் ஆகவும் அதிகரித்துள்ளது.

(இ-117)

---

### நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

1996 - 09 - 30 ஆம் திகதியில் உள்ளவாறான வாக்காளர் பட்டியலைத் தயாரித்து, அதற்கமைய கிளைக்குழுத் தெரிவினை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் எமது சங்கத்தினால் மேற்கொள்ளப் படுகின்றன. ரூபா 100/- க்கு குறையாத பங்குப் பணத்தைச் செலுத்தியுள்ள அங்கத்தவர்களது பெயர்களே வாக்காளர் பட்டியலில் இடம் பெற முடியும். அந் நிலையில் ரூபா 100/-க்கு குறைவான பங்குப் பணத்தை வைத்திருக்கும் அங்கத்தவர்கள் 1996 - 09 - 30 ஆம் திகதிக்கு முன் தத்தமது கிளை முகாமையாளர்களிடம் மிகுதித் தொகையைச் செலுத்தி வாக்காளராகும் தகுதியைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

(சி- 2752)

---

உ
சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாது வருடம் ஆனி மாதம் 31-ம் நாள் [ 15 — 07 — 1996 ] திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி தம்பையா மாணிக்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 15 — 08 — 1996 வியாழக்கிழமை காலை நயினாதீவு தீர்த்தக்கரையிலும் பின்னர் வீட்டுக் கிருத்திய வைபவம் அன்னாரது இல்லத்திலும் நிகழவுள்ளதால் இவ்விரு வைபவங்களிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறும், பின்பு இடம்பெறும் மதியபோசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

5-ம் வட்டாரம்,
நயினாதீவு. (42220)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. சு. ஜெயக்குமாரன் அவர்களின் அருமைத் தந்தையாரும், எமது பகுதித் தலைவர் திருமதி தி. ஜெயக்குமாரனின் மாமனாருமான

### திரு. பொ. சுப்பையா

அவர்களின் மறைவுக்கு எமது
கண்ணீர் அஞ்சலி.

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள்.
(சி – 2754)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 16—05—1958

உதிர்வு: 16—07—1996

உடுவிலைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

### சிதம்பரப்பிள்ளை பிரேம்குமாரன்

(யாழ். பல நோ. கூ. சங்க பணியாளர்)

இக்கணமும் உம்இழப்பை உண்மையெனக்
கொள்வோமா
எக்கணமும் உன்நினைவால் உன்னவர்கள் வாழ இங்கு
விண்ணுலகில் தேவனோடு வாழ்கின்றீர் எம் ஐயா!
உன்துணையும், குழந்தைகள், உற்றார்கள் உன்
ஆன்மாவின் சாந்திக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது ஆத்ம இளைப்பாற்றிக்காக யாழ். கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 15-08-1996 வியாழக்கிழமை பகல் 11-30 (பழைய நேரம்) மணிக்கு நடைபெறும் திருப்பலியில் பங்கு கொண்டு, பின்னர் அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

தகவல்:
மனைவி ஜெஸிக்கா,
63/1, A பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். [42159]

---

## உடுவில் பிரதேச செயலக உபஅலுவலகம் இயங்குகிறது

வலிகாமம் தெற்கு, ஓக. 14

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில், சுன்னாகம் பாதுகாப்பு அரணுக்குள் வசிக்கும் பொதுமக்களின் நன்மைகருதி அப்பகுதியில் உடுவில் பிரதேச செயலகத்தின் உபஅலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்த உபஅலுவலகம் சுன்னாகம் பிரதேச சபை அலுவலகக்கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் முழு நாளாக இயங்கும் இந்த அலுவலகத்தில் பாதுகாப்பு அரணுக்குள் வசிக்கும் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பொது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் மேற்படி அலுவலகத்தில் அப்பகுதியைச் சேர்ந்த கிராமசேவை அலுவலர்கள் சமுகமளிக்கவும் - பொதுமக்களின் தேவைகளை கவனிக்கவும்— ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(இ-152)

## அச்சுவேலியில் எரிபொருள்

அச்சுவேலி ஓக. 14

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது.

பத்துத் தினங்களுக்கு ஒரு தடவை, வாகன வகைக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

(இ-11)

---

## கண்ணீர் அஞ்சலி!

திருமதி

### செல்வரத்தினம் நாகரத்தினம்

(யாழ். மத்திய கல்லூரி அதிபரின் தாயார்)

சிந்தையால் சிவமென்ற நாமம் கொண்டு
சீர் பெற்ற நல்லுறவால் ரத்தினம் பெற்று.
உள்ளத்து உவகையால் உலகை யேற்று - தம்
உயர்வான பண்பால் பலரை ஏற்றார்.

கண்ணுற்ற வேளையில் கணவனையும்
கண்ணுறங்க முன்னே தம் செல்வங்களையும்
நல்லொழுக்க சீலராய் நாடுபோற்றும் பாலராய்-இந்த
நானிலம் போற்ற வைத்த மங்கையவர்.

உத்தமி அவரூராம் உரும்பராய்ப் பதியிலே
உலகையே கைவிட்ட ரத்தினமவர்
தம் நாமம் தனைக்க வென்று தரணிக்கு - ஐந்து
தவப்புதல்வரை தாளீன்ற தமிழ்த்தாய்.

ஆடி அமாவாசையிலே தந்தையுடன்
தானிருக்க வேண்டு மென்று
முந்தை நாளில் மூடிவிட்ட மங்கை - தன்
முது குலத்துப் பண்புகளைப் போற்றிய குல நங்கை

இவரது மறைவால் ஆறாத்துயருற்றிருக்கும் மக்களுக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, துயரில் நாமும் பங்கேற்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
துணை ஆளணியினர், மாணவர்கள்.
யாழ். மத்திய கல்லூரி.

(42234)

---

## ஈராண்டு நினைவுப் பூக்கள்

பிறப்பு: 12 — 03 — 1932



இறப்பு: 14 — 08 — 1994

### அமரர் ஆறுமுகம் லோகேஸ்வரன்

(இளைப்பாறிய ஆசிரியர் யா/ அச்சுவேலி ம. வி)

திதி: 23 – 07 – 1996

பார் கலங்கும் பயங்கர ஷெல்லடியால் நீங்கள்
பூர்வபக்க அட்டமியில் பூமிவிட்டுச் சென்றீர்
யார் இருந்தும் ஆறவில்லை எம் துயரம் அதனால்
ஊர் புகழ ஒரு தடவை ஓடி இங்கு வாங்கள்.

தேடும் நெஞ்சங்கள்;

மனைவி, மகள், மகன்,
மருமகன், மருமகள்.

அரசடி வீதி,
அச்சுவேலி.
14 - 08 - 96 (42196)

உதயன்

# நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே பொருள்கள் கிடைக்க வேண்டும்

## வங்கி வாடிக்கையாளர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம் ஓக 14

கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் பாவனைப் பொருள்கள் அனைத்திற்கும், ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பல முகவர்களும், அப்பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் விற்பனைப் பிரதிநிதிகளும் உள்ளனர்.

அந்தப் பொருள்களை சந்தைப்படுத்துவதும், நிறுவனங்கள் குறிப்பிட்ட விலைக..ல் விற்பனை செய்வதும், விற்பனைப் பிரதிநிதிகளைப் பொறுத்த விடயமே. ஆகையால் விற்பனைப் பிரதிநிதிகள் தமது நிறுவன உற்பத்திப் பொருள்களான - குளிர் பானங்கள். உணவுப்பண்டங்கள், பால்மா வகைகள், முக்கியமாக மருந்து வகைகளை நிறுவனங்கள் குறிப்பிடும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும்; உறுதிப் படுத்த வேண்டும்.

யாழ். மாவட்ட அரச தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன் காக்கும் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இவ்வாறு கோரும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பிரஸ்தாப கூட்டம் கடந்த பத்தாம் திகதி யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள பிலிப்ஸ் புனர்வாழ்வு நிலையத்தின் பணிமனையில் நடைபெற்றது

சங்கத் தலைவர் சு. பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ இப்போதுள்ள போக்குவரத்துக் கஷ்டங்களால் வங்கி வாடிக்கையாளர் தமது வங்கித் தேவைகளை நேரத்திற்குள் பூர்த்தி செய்ய முடியாத நிலை இப்போது உண்டு. அதனால் இது குறித்து வங்கி நிர்வாகிகளுடன் சங்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தி மாற்று வசதிகளை ஏற்பாடு செய்ய முயற்சிக்க வேண்டும்.

★ மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள இடங்களில் ஏற்கனவே இயங்கி வந்த வங்கிக் கிளைகள் சில இன்னமும் செயற்படத் தொடங்காததால்–

மீளக் குடியமர்ந்தவர்களில் ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன பாதிக்கப்படுகின்றன. இந்தக் கஷ் – நிலை நீக்கப்பட வேண்டும்.

★ வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளுக்கு ஏற்கனவே பலர் பணம் செலுத்தியும் நகைகளை மீளப்பெற முடியாதவர்களுக்கும்-

மேலும் பணம் கட்டி தத்தமது நகைகளை மீளப்பெற இருப்பவர்களுக்கும் -

அடகு நகைகளை எடுத்து வந்து வழங்குவதற்கு மக்கள் வங்கி அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும்.

(அ 5)

# திருமலைக்கு ஆபிரிக்க மலைவேம்பு

திருகோணமலை ஓக. 14

உஷ்ண வலய மர இனமான ஆபிரிக்க மலைவேப்பங் கன்றுகளை திருகோணமலையில் நடுவதற்கான ஒழுங்குகளை அப்பகுதி வன பரிபாலனத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

மழை காலம் ஆரம்பித்ததும் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இம்மரக் கன்றுகள் நடப்படவுள்ளதாகவும், இம்முயற்சி வெற்றியளித்தால் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நாட்டப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

[இ-10)

# ஆசிரியர் மதிப்புயர...

பாடசாலைகளுக்குச் சமுகமளித்தும், வகுப்பறைகளுக்குச் சென்று பாட போதனை நடத்தாமல் சில ஆசிரியர்கள் வீண் பொழுது போக்குவதாக—

பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா கண்டித்துள்ளார்.

ஆசிரியர்கள் தமது சொந்த அலுவல்களின் பொருட்டு அடிக்கடி பாடசாலைக்குச் சமுகமளியாது இருந்தாலே மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவது உண்டு. ஒரு நாளைக்கு ஒரு பாட அலகினை இழந்தாலும் மாணவர்களின் கல்வி நிலையில் தொடர்ச்சி அறுந்து பின்னடைவுக்கு வழிகோலும்.

அப்படியிருக்க, பாடசாலைக்குச் சமுகமளித்தும் வகுப்பறைக்குப் போதனைக்குச் செல்லாத ஆசிரியர்களால் மாணவர்களின் கல்வியில் உண்டாகும் இழப்பும், பாதிப்பும் இலகுவில் மதிப்பிடக் கூடியவை அல்ல.

இப் பத்தியில் நாம் அக்டிகடி குறிப்பிடுவது போல, ஆசிரியப் பணி மிகவும் மகத்தானது. ஏனைய தொழில்களையும் விட மிக உயர்ந்த சமூகப் பணியுமாகும்.

அதாவது ஏனைய தொழில்களைச் செய்யும் அதிகாரிகளிடமிருந்தோ, பெரும் பதவியாளர்களிடமிருந்தோ எதிர்பார்க்காத அர்ப்பணிப்புடனான கடமையை மக்கள் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்.

உயர் அதிகாரிகளையும், பெரும் பதவிக்காரர்களையும் உருவாக்கிவிடும் சமூகச் சிற்பிகள் ஆசிரியர்களே. மகவை ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாயைப்போல,சமூகத்தில் தமது மாணவர்கள் உயர் நிலையில், பலராலும் போற்றப்படும் நிலையில் இருக்கிறார்கள் என்று அறியும் போது பெரிது உவப்பவர்களே முன்னைய ஆசிரியர் பரம்பரையினர். அந்த உவப்பு தமது முதுமைக் காலத்திலும் ஓர் ஆத்ம திருப்தியைத் தருவதாக அவர்கள் பெருமைப் படுவதும் புளகாங்கிதம் அடைவதும் உண்டு.

அதுவும், தமிழ்ப் பிரதேசங்களின், குறிப்பாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி நிலை மிகவும் சரிந்து போயுள்ள இவ்வேளையில்—

தமிழர்களின் கல்விப் பாரம்பரியத்தைப் பேணி வளர்ப்பதில் ஆசிரியர்களுக்கு மிக பிரதான பங்குண்டு.

குடாநாட்டில் மிகப்பெரிய கல்விக் கூடங்களாக விளங்கிய பாடசாலைகள் இப்போது இடிந்தும், அழிந்தும் போயுள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும். காங்கேசன் துறை நடேஸ்வரா, கீரிமலை நகுலேஸ்வரா, வீமன்காமம் மகாவித்தியாலயம், குப்பிளான் விக்கினேஸ்வரா,குரும்பசிட்டி சன்மார்க்க வித்தியாலயம் மற்றும் பல பாடசாலைகள் இதற்குச் சில உதாரணங்கள்.

மாணவர்கள் அங்கும் இங்குமாக இடம் பெயர்வதால் ஏற்படும் பாதிப்புகளைப் பகுத்துணர வேண்டும். இத்தகைய அடிமட்ட நிலையிலிருந்து தமிழ் மாணவரின் கல்வி வளர்ச்சியைக் கட்டி எழுப்ப வேண்டிய பெரும் பொறுப்பு புதிய சந்ததி ஆசிரியர்களிடமே உண்டு.

அவர்கள் அர்ப்பணிப்புடனும், தொண்டு உள்ளத்துடனும் உழைத்தால் கல்விப் பயிரை செழித்தோங்க வளர்க்கலாம். ஆசிரியர்களுக்குரிய மதிப்பும் மீளவரும்.

# அடுத்தமாதம் தொடக்கம் புதிய கடவுச்சீட்டுக்கள்

வலிகாமம் தெற்கு ஓக. 14

இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் புதிய தொடர்பிலான கடவுச் சீட்டுக்கள் அடுத்த மாதம் இரண்டாம் திகதியில் இருந்து வழங்கப்பட உள்ளன.

தற்போது நடைமுறையில் இருந்து வரும் கடவுச் சீட்டுத் தொடர்கள், மறு அறிவித்தல் வரை புதியதொடர்பு கடவுச் சீட்டுகளுடன் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என குடிவரவு-குடியகல்வு ஆணையாளர் திரு. ஜே ஏ. ஆரியசேனா அறிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளில் கடவுச் சீட்டுக்கள் வழங்கும் நடைமுறைகள் பற்றி நன்கு ஆராய்ந்து அறிந்து, சிறந்த பாதுகாப்புத் தன்மைகள் கொண்ட கடவுச் சீட்டுக்கள் புதிய தொடரின் கீழ் வழங்கப்பட உள்ளன.

கடவுச் சீட்டுக்களின் புகைப் படங்கள் முழுமையான மாற்றங்களை கொண்டு பாதுகாப்பாக கணனி மயமாக்கப்பட்டு இலக்க ஒழுங்குகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட உள்ளன.

புதிய கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் இரண்டு பகுதிகளைக் கொண்டவையாக (விண்ணப் பங்களும்- புகைப்படப் படிவங்களும்) அமைந்திருக்கும்.

புகைப்படங்கள் யாவும் 45 mm X 35 mm அளவினை கொண்டதாகவும்-

நிழற்படங்களாகவும் அமைந்திருக்க வேண்டும்.

கறுப்பு - வெள்ளை நிறத்திலான புகைப்படங்கள் கடவுச் சீட்டுகளுக்காக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

விண்ணப்பப்படிவங்களை குடிவரவு-குடியகல்வு திணைக்களம், மாவட்ட கச்சேரிகள், பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-152)

# யாழ். ஆஸ்பத்திரியில் கட்டாக்காலி நாய்கள்

யாழ்ப்பாணம் ஓக. 14

யாழ் ஆஸ்பத்திரியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

சமீபத்தில் ஒரு ஊழியர் உட்பட நால்வர் விசர்நாய் ஒன்றினால் கடியுண்டனர்.

ஆஸ்பத்திரி விடுதி ஒன்றினுள் அலைந்த இந்த நாயை வெளியேற்றி விரட்டிச் சென்ற ஒரு ஊழியரை அந்த நாய் கடிப்பதற்காக துரத்திச் சென்றது.

அந்த ஊழியர் ஓடித்தப்பியதும் நடைபாதையால் வந்த மற்றொரு ஊழியரை அது கடித்தது.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி மேலும் வீதியில் சென்ற மூவரைக் கடித்துக் குதறிவிட்டு அந்த நாய் ஓடியது.

(இ-15)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி தண்ணீர்ப் பிரச்சினை

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக் கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டதால் வார்ட்டுகளில் தங்கியுள்ள நோயாளர்கள் குடி தண்ணீர் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கு தண்ணீர் இன்றிக் கஷ்டப்படுகின்றனர்.

தினமும் இரண்டு தடவைகள் குடிதண்ணீர் ஊழியர்களால் வார்ட்டுகளுக்கு வழங்கப்படுவதாகவும் —

இந்த தண்ணீரை வேறு தேவைகளுக்கு பாவிக்க அனுமதிக்கப்படுவதில்லை எனவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆஸ்பத்திரியின் தண்ணீர் பம்ப் பழுதடைந்துள்ளதால் வார்ட்டுகளுக்கு மேலதிக தண்ணீர் வழங்க முடியவில்லை எனவும் —

ஊழியர் பற்றாக்குறை காரணமாக சகல வார்ட்டுகளுக்கும் தண்ணீர் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொடுக்க முடியவில்லையெனவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(இ-117)

சாவகச்சேரி

# பிரதேச செயலகத்தை 2 பிரிவுகளாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 14

சாவகச்சேரி பிரதேச செயலகம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும்.

இப்படி யாழ். செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச செயலராலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதேவேளை —நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலக எல்லைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று அந்தந்தப் பிரதேச செயலர்கள் இக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தனர்.

[இ-3]

# விவசாயிகளுக்கு விதைகள் விநியோகம்

மீசாலை கமநல சேவை நிலையத்தில் மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கான கத்தரி, வெண்டி, பாவற்காய், தக்காளி, மிளகாய், புடோல் போன்ற விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட இந்த விதைகள் குறிப்பிட்ட அளவே உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# தபாற் பெட்டிகள்

யாழ்.தபாலகத்துக்கு யாழ். அரசாங்க அதிபர் மூலம் புதிய தபால் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவைகள் யாழ். தபால் மாவட்டம் தவிர்ந்த ஏனைய தபால் மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாக யாழ்.பிரதம தபாலகம் தெரிவித்துள்ளது.

(இ-15)

# அஞ்சல் அதிபர் விண்ணப்ப படிவம்

அஞ்சல் அதிபர் தேர்வுக்கான விண்ணப்பப் படிவமும், அறிவுறுத்தல்களும் தென்மராட்சிப் பகுதியிலுள்ள அஞ்சல் அலுவலகங்களிலும். உப அஞ்சல் அலுவலகங்களிலும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

(இ-117)

# மதகுருமாருக்கு முன்னுரிமை

''பூசகர்கள் பற்றாக்குறை'' என்ற தலைப்பில் ''உதயன்'' பத்திரிகை ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. பற்றாக்குறை என்பது உண்மை தான்

ஆனால் இங்கு கடமையாற்றுகின்ற மிகக் குறைந்த அளவில் உள்ள எத்தனையோ இந்து மதகுருமார்கள் தங்களது பூசைக் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில், பலசந்தர்ப்பங்களில் நீண்ட வரிசையில் நிற்கும் மக்களுடன் மக்களாகத் தாங்களும் ஒருவராகப் பொறுமையாக நிற்பதனை அவதானிக்க முடிகிறது.

எங்கள் சைவசமய மக்களில் மதகுரு ஒருவர் வரிசையில் நிற்கிறார் என்று தெரிந்தும், கண்டும் காணாதவர்கள் போல இருப்பவர்கள் ஒரு சிலர். குருவானவர் ஒருவர் முன்னுரிமை பெற்று முதல் போனால், ''என்ன இவர் பின்பு வந்தவர் முன்பு போகிறார்?'' என்று வினா எழுப்புவோர் இன்னும் சிலர். ஆனால் இவர்கள் எல்லோரும் நெற்றியில் விபூதியும், பொட்டும் வைத்திருப்பார்கள். சமய குருவை மதிப்பது சமயத்துக்கு மதிப்பளிப்பதும், அதனைப் பெருமைப் படுத்துவதும் ஆகும் என்பதனை அவர்கள் ஏனோ உணர்வதில்லை.

வாசகர் திருமுகம்

நீண்ட வரிசையில் நிற்கும் மக்களுடன் ஒப்பிடும் போது ஒன்று இரண்டு மதகுருக்களுக்கு சிறு சலுகை அளித்து அவர்கள் முன்னுக்குச் செல்ல உதவுவதால் பெரும் பாதிப்பு ஏற்படாது. அவ்வாறு செய்வதால் அவர் பணிபுரியும் ஆலயக் கிரியைகளை, பூசைகளை உரிய நேரத்தில் செய்வதற்கு உதவியதாக இருக்கும்,

சமய குருமார்கள் எங்கும் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை இந்துக்கள், சைவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனைய சமய மக்கள் தங்கள் மதகுருவுக்கு அளிக்கும் மதிப்பைப் பார்த்தாவது எங்கள் சைவ மக்கள் திருந்துவது அவசியம்.

சிவபெருமானின் அடியார்க்கும் அடியேன் என்று சுந்தரர் பாடுகிறார். மதகுருமாருக்கு மதிப்பளிக்கும் எங்கள் சமயத்தின் ''பண்டைய'' பாரம் பரியம் மீண்டும் வரக்கூடாதா? முப்பொழுதும் இறைவனின் மெய் தீண்டி அவனுக்குத் தொண்டு செய்யும் மதகுருமாருக்கு மதிப்பளித்து உதவுவதால் எங்களுக்கு புண்ணியமே சேரும்.

சைவ அபிமானி.

யாழ்ப்பாணம்.

# ஜெயலலிதாவுக்கு முன் பிணை மறுப்பு!

## நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

சென்னை, ஒக. 14

முன்பிணை அனுமதி கோரி தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நிராகரித்து நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.

1991 ஆம் ஆண்டு வெளிநாட்டிலிருந்து மூன்று லட்சம் அமெரிக்க டொலரை அன்பளிப்பாகப் பெற்றது தொடர்பாக மத்திய புலனாய்வுத் துறை தம்மைக் கைது செய்யக்கூடுமெனக் கருதி — தமக்கு முன்பிணை அனுமதி வழங்குமாறு கோரி — சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

தாம் கைது செய்யப்படக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் உண்டு என்பதை நிரூபிப்பதற்கு வேறு ஆதாரங்கள் எதனையும் சமர்ப்பிக்காது வெறுமனே கற்பனையாக ஜெயலலிதா சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டை மட்டும் வைத்து முன்பிணை அனுமதி வழங்க முடியாது; முன்பிணை அனுமதி வழங்க அது போதுமான காரணமல்ல என்று நீதிபதி சிவப்பா தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவுக்கு எதிராக மத்திய புலனாய்வுத்துறை (சி. பி. ஐ.) வழக்கு எதனையும் பதிவு செய்யாத ஒரு நிலையில் அவர் கைது செய்யப்படக்கூடும் என அஞ்சுவதற்கு காரணம் எதுவும் இல்லை என்றும் —

எனவே முன்பிணை மனுவை நிராகரிக்க வேண்டும் என்றும் —

சி. பி. ஐயின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் —

கொடைக்கானலில் ஹோட்டல் ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கிய வழக்கில் இன்று வரை ஜெயலலிதா கைதுசெய்யப்பட மாட்டார் என தமிழக அரசு ஏற்கனவே நீதிமன்றத்திடம் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். (உ)

# பாக். குழப்ப முயன்றாலும் தேர்தல் நடந்தே தீரும்

## இந்திய அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, ஒக. 14

காஷ்மீரில் தேர்தல் நடத்தும் திட்டத்தை சீர்குலைக்க பாகிஸ்தான் எவ்வளவு தான் முயன்றாலும் அங்கே தேர்தல்களை நடத்தி முடிப்பது என்பதில் அரசு உறுதியாக இருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா தெரிவித்தார்

மக்கள் தங்கள் வாக்குரிமையைச் செலுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (இ-3)

# கிளிநொச்சி அலுவலகங்கள் செயற்படும் இடங்கள்

கொழும்பு, ஒக. 14

கிளிநொச்சி செயலகமும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும் தற்காலிகமாக ஸ்கந்த புரத்தில் இயங்குகின்றன.

மக்கள் வங்கி அக்ராயன் குளத்துக்கும், இலங்கை வங்கி மாங்குளத்துக்கும், தேசிய சேமிப்பு வங்கி ஸ்கந்தபுரத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அரச அதிபரை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இத் தகவல்களை வெளியிட்டது. (உ-3)

# வில்லூன்றித் தீர்த்தத்தில் மக்கள் இம்முறை குறைவு

யாழ்ப்பாணம், ஒக. 14

ஆடி அமாவாசை தினமான நேற்று வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர். வழமையைவிடக் குறைவான மக்களே இம்முறை வந்தமை குறிப்பிடத்தக்கது.

காலை 6 மணி தொடக்கம் பெரும் மக்கள் கூட்டம் திரண்டது. மக்கள் வாத்திய ஒலியுடன் தமிழோடிசை பாடிய நிகழ்ச்சிகள் தெய்வீக பக்திச் சூழலை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

அண்மைக்கால அனர்த்தங்களால் ஏற்பட்ட பின்னடைவுகள் யாவும் சீர் செய்யப்பட்டு தீர்த்த வளாகம் மிகத் துப்புரவாகவும் புனிதமாகவும் இருக்கக்காணப்பட்டது.

காலை 8 மணியளவில் வில்லூன்றி விநாயகர் தீர்த்த வாரி கொண்டபின் சிவராமலிங்கேஸ்வரர் ஆலய பூமியில் அமைக்கப்பட்டிருந்த விசேட அலங்கார மண்டபத்தில் மதியம் வரை பக்த அனுக்கிரகம் செய்தார். (அ)

# இளைப்பாறிய இராணுவ அதிகாரிகள் மூவர் பங்களாதேஷில் கைதாகினர்

## 1975 புரட்சியில் பங்கு பற்றியவர்களாம்

டாக்கா, ஒக. 14

பங்களாதேஷில் பொலீஸார் நேற்று மேற்கொண்ட திடீர் நடவடிக்கை ஒன்றில் இளைப்பாறிய உயர் இராணுவ அதிகாரிகள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

1975 ஆம் ஆண்டு பங்களாதேஷில் இடம் பெற்ற இராணுவப் புரட்சியில் இவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இளைப்பாறிய கேணல் பாருக் ரகுமான், கேணல் சகுதியால், மேஜர் கதிரிஸ் கமன் ஆகியோரையே திடீர் விசாரணைக் குழுவினர் கைது செய்துள்ளனர். (இ-3)

# பங்களாதேஷ் புரட்சியின் சூத்திரதாரி பாங்கொக்கில்

## திருடியபோது பிடிபட்டார்

டாக்கா ஒக. 14

1975 ஆம் ஆண்டு பங்களாதேஷில் ஆட்சியில் இருந்த அவாமி லீக் அரசை வீழ்த்த மேற்கொள்ளப்பட்ட இராணுவப் புரட்சியில் பங்கேற்ற முன்னைநாள் இராணுவ மேஜர் பசுல் ஹூடா, தற்போது பாங்கொக்கில் சிறை வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

கடந்த ஜூலை 12 ஆம் திகதி கடையில் திருடிய குற்றச்சாட்டின் பேரில் பாங்கொக் பொலீசாரால் கைது செய்யப்பட்ட ஹூடாவை பங்களாதேஷுக்கு நாடு கடத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால் தான் நாடற்றவர் எனவும், தனக்குப் பாதுகாப்பளிக்குமாறும் அகதிகளுக்கான ஐ. நா. தூரகத்திற்கு ஹூடா விண்ணப்பித்துள்ளார்.

ஜெனிவாவிலுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், ஹூடா தாம் நாடற்றவர் என்பதை நிரூபிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் திருமதி ஷேக் ஹஷினாவின் தலைமையிலான அவாமி லீக் பங்களாதேஷில் ஆட்சிக்கு வந்ததும் 1975 இல் இடம் பெற்ற இராணுவப் புரட்சியில் பங்கேற்ற பலர் வெளிநாடுகளுக்குத் தப்பியோடினர். இவர்களில் ஹூடாவும் ஒருவராவார்.

1975 ஆம் ஆண்டு பங்களாதேஷில் கனிஷ்ட இராணுவ அதிகாரிகளினால் நடத்தப்பட்ட திடீர் புரட்சியின் போது சுதந்திர பங்களாதேஷின் முதலாவது பிரதமரும், வங்கச் சிங்கம் என்று அழைக்கப்பட்டு வந்தவருமான ஷேய்க் முஜிபுர் ரஹ்மான் படுகொலை செய்யப்பட்டார்.

தற்போது பங்களாதேஷ் பிரதமராக இருக்கும் ஷேய்க் ஹஷினா முஜிபுர் ரஹ்மானின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)


மருந்தாளர் / மருந்து கலவையாளர்

தேவை

இருப்பிட வசதி உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

வதனா மருந்தகம்

பஸ் நிலையம், சாவகச்சேரி.

(சி/2758)


மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 14-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### வவுனியாவில் சிங்களவருக்கு உள்ளது போன்று

# வடக்கு – கிழக்குக்கு வெளியே தமிழ் – முஸ்லிம் பிரதேச செயலர் பிரிவு

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோருகிறது

கொழும்பு, ஒக. 14

வவுனியாவில் சிறுபான்மை சிங்கள மக்களின் நலன் கருதி அங்கு சிங்கள பிரதேச செயலாளர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதே போன்று, வடக்கு கிழக்குக்கு வெளியே சிங்களப் பகுதிகளில், குறிப்பிட்ட இடங்களில் செறிவாக வாழும் தமிழ் — முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணும் வகையில் தமிழ் — முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

புதிதாக பிரதேச செயலாளர் பிரிவுகளை அமைப்பதற்கான ஆணைக் குழுவின் முன்பாக முஸ்லிம் காங்கிரஸ் இக்கோரிக்கையைவிடுத்துள்ளது. (இ-3)

# யாழ். பல்கலை மருத்துவ பீடத்துக்கு இம்முறை 100 மாணவர்கள் அனுமதி

கொழும்பு, ஒக. 14

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு இம்முறை நூறு மாணவர்கள் அனுமதிக்கப்படவிருக்கின்றனர். கடந்த வருடத்தை விட இம்முறை இருபது மாணவர்கள் கூடுதலாக அனுமதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் உள்ள ஆறு பல்கலைக் கழகங்களினதும் மருத்துவ பீடங்களுக்கு இம்முறை அனுமதி பெறும் 855 மாணவர்களின் மொத்த எண்ணிக்கைவிவரம் பல்கலைக்கழக ரீதியாக வருமாறு:-

கொழும்பு — 180, காலி — 120, பேராதனை — 165, யாழ்ப்பாணம் — 100, களனி — 150, ஜெயவர்த்தனபுர — 140.

(உ-3)

# தாக்குதலை படையினர் நிறுத்த வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

கொழும்பு ஒக. 14

வன்னியில் படையினர் தற்போது நடத்தும் தாக்குதல் காரணமாக மக்கள் அகதிகளாகி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மக்கள்இல்லாத வன்னியையே இன்று நாம் காண்கிறோம் ஆகவே அரச படைகள் தற்போது நடத்தி வரும் தாக்குதல்களை நிறுத்தி தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபட வேண்டும்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா மேற் கண்டவாறு தெரிவித்திருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும், இல்லையேல் அவசரகாலச் சட்ட நீடிப்பு வாக்கெடுப்பில் ஈ. பி. டி. பி. எம்.பிக்கள் பங்குபற்ற மாட்டார்கள்.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் வடக்கு—கிழக்கு மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினை குறித்து அவருடன் பேசி முடிவெடுப்பேன் என்றும் டக்ளஸ் தேவானந்தா கூறினார். (இ-3)

# மணலாறில் நேற்று மோதல்

கொழும்பு, ஒக. 14

மணலாறில் உள்ள கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் நேற்றுக் காலை புலிகள் மீது அரசுத் துருப்புகள் கைக்குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

தாக்குதலின் பின்னர் அப்பகுதியில் புலிகளின் இரு சடலங்களையும் ஆறு கைக்குண்டுகளையும் படையினர் கண்டுபிடித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-3)